[1979 மார்ச் 13

இணைப்பு I

[409-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 367க்கான விடையைக் காண்க.)

கடந்த ஐந்தாண்டுகளில், மைய அரசு, தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகத்துக்காக வழங்கிய மானியங்களின் விவரம் :—

1. 1973-1974 திட்டத்தின் கீழ் புத்தகங்கள், மரச் சாமான்கள், அலுமினியம், ஏணி முதலியன வாங்க.	ரூ.	60,000
2. 1974-75 பாதுகாப்புக்கான சாதனங்கள்	ரூ.	50,000
மரச்சாமான்கள் வாங்க ..	ரூ.	50,000
3. நகல் எடுக்கும் கருவி வாங்க (Reprography equipment)	ரூ.	1,00,000
4. கையெழுத்துப் பிரதிகளை புத்தகமாக .. வெளியிடுவதற்கு.	ரூ.	1,00,000
5. அச்சகம் நிறுவுவதற்கு	ரூ.	50,000
6. கட்டிடத்தை விரிவாக்குவதற்கு ..	ரூ.	50,000
7. புத்தகம் கட்டுவதற்கு .. (Re-binding of books)	ரூ.	50,000

இந்நூலகம் மேலும் நல்ல முறையில் செயல்பட அக்கறை கொண்டு இந்நூலக அபிவிருத்திக்காகத் தேவையான நிதி உதவியை நிர்ணயிக்க, மைய அரசு 1977–78-ல் ஒரு வருகைக் குழு (Visiting Committee) அமைத்தது. இக்குழுவின் பரிந்துரைகளின்படி, 1977-78-ம் ஆண்டில் கீழ்க்கண்ட செலவினங்களுக்காக ரூ.2.5 லட்சம் நிதி உதவியளித்துள்ளது.

(அ) கட்டிடங்களை பழுது பார்த்து புதுபிக்க	ரூ.	1,00,000
(ஆ) புத்தக அடுக்கம் வாங்க	ரூ.	50,000
(இ) இரசாயன பொருள்கள் வாங்க	ரூ.	35,000
(ஈ) மைக்ரோ பிலிம் வாங்க	ரூ.	15,000
(உ) அச்சகத்துக்குத் தேவையான பொருள்கள் வாங்க.	ரூ.	50,000

இத்துடன், 1978–79 ஆண்டு தொடங்கி அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இந்நூலகத்தில் சில கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே உள்ள சில பணியிடங்களை மேல் நிலைப்படுத்துவதற்காகவும், தொடரும் செலவினமாக ஆண்டுக்கு ரூ. 60,000-ம், முதலீட்டுச் செலவினங்களிக்காக ஆண்டொன்றுக்கு ரூ. 3.5 லட்சம் வரை நிதி உதவி அளிக்க முன் வந்துள்ளது,